விலை: 40.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 114 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 29 செவ்வாய்க்கிழமை (12.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே



## கொட்டும் மழையிலும் அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்கிறது



(கொழும்பு)
காலிமுகத்திடலில் மூன்றாவது நாள் இரவுப் பொழுதிலும் கொட்டும் மழையில் "கோட்டா வீட்டுக்கு போ" என்ற கோஷத்துடன் மக்களின் மாபெரும் போராட்டம் தொடர்கின்றது. ( 15ஆம் பக்கம் பார்க்க)



### மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும்

# பிரச்சினைகளை விரைவில் தீர்ப்போம்



## நாட்டு மக்களுக்கு மகிந்த விசேட உரை

- பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும்.
- வீதிகளில் போராட்டம் நடத்தும் ஒவ்வொரு நொடியும் டொலர்களைப் பெறும் வாய்ப்பை இழக்கிறோம்.
- இரசாயன உரத் தடை நீக்கப்படும்.
- நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு முழுப்பொறுப்பேற்கின்றோம்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருளுக்காக காத்திருந்த மேலும் ஒருவர் நேற்று மரணம்

(கொழும்பு)
ஹினிதும தவலம எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் நேற்றுக் காலை சாரதி ஆசனத்திலேயே உயிரிழந்துள்ளதாக ஹினிதும 15

## 'கோட்டா கோ கிராமம்' இணையத்தில் வைரல்



15

### தேசிய அரசு அமைக்க இணக்கம்

## பிரதமராகிறார் ரணில்?

(கொழும்பு)
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையடுத்து தேசிய அரசு ஒன்றை அமைக்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதில் பிரதமராக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்தில் இருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக 15

## லொறி மோதியதில் 10 வயது சிறுவன் பலி



### யாழ்.நகர்ப் பகுதியில் தாய் முன்னே சம்பவம்

(யாழ்ப்பாணம்)
லொறி மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக சம்பவ இடத்திலேயே 15

### என்னதான் ஆட்டங்கள் போட்டாலும்

## ராஜபக்ஷவின் ஆட்சியை கவிழ்க்கவே முடியாது

### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)
"மக்களின் ஆர்ப்பாட்டங்களை நான் மதிக்கின்றேன். ஆனால், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் போடும் ஆட்டங்களை நான் வெறுக்கின்றேன்.

அவர்கள் என்ன தான் ஆட்டங்கள் 15

### கோட்டாவுக்கு ஆதரவளிப்போருக்கு

## புல், புண்ணாக்கு உணவாக வைப்பு



(அநுராதபுரம்)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவாக நேற்று அநுராதபுரத்தில் பேரணியொன்று 15

## அதிகாரங்களை குறைப்பதற்கு கோட்டாபய இணக்கம்

### தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)
"நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி - சஜித் பேச்சுவார்த்தை வெற்றி

# இடைக்கால அரசை உருவாக்கி பாராளுமன்ற தேர்தல் நடத்த இணக்கம்

### பாராளுமன்ற சுயாதீன அணி தெரிவித்ததாக உதய கம்மன்பில டுவிட்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்திருப்பதாக பாராளுமன்ற சுயாதீன அணி தெரிவித்துள்ளது.,

உதய கம்மன்பில தமது டுவிட்டர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார். குறித்த பேச்சுவார்த்தையில், அடிப்படை சேவைகளை, ஸ்திரப்படுத்தி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவதற்காகவும், பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், மக்கள் தங்களுக்கு விருப்பமானவர்களை தெரிவு செய்ய முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணியின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று மாலை 4 மணிக்கு எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

இதன்போது 21ஆவது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். (ம-7)

# சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி அரசை விமர்சித்தால் கடும் நடவடிக்கை

### அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்க வேண்டாம் என அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் சந்தன தென்னகோன் கடிதமொன்றை வெளியிட்டு இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையை அவதூறு செய்யும் வகையிலும், அரசின் கொள்கைகளை விமர்சிக்கவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டாம் என கண்டி மாவட்ட செயலகத்தின் கடிதத் தலைப்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயசிங்கவிற்கு "எச்சரிக்கை விடுத்தல்" எனும் தலைப்பில் கடிதம் ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால், அது தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயசிங்கவினால் பேஸ்புக் பக்கத்தில் அரசாங்கத்திற்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்தையடுத்தே இந்த எச்சரிக்கை கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

### பாராளுமன்றத்தில்

# உணவு, காகிதங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை கவனத்தில் கொண்டு, பாராளுமன்றத்தில் உணவு மற்றும் காகிதாகிகளைப் பயன்படுத்துவதை கூடியவரை மட்டுப்படுத்துமாறு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய, பாராளுமன்றத்தில் நாளாந்தம் தயாரிக்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தகவல் பரிமாற்றத்துக்காக காகிதாதிகளை பயன்படுத்தாமல் மின்னஞ்சலைப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# போராட்ட களத்தில் புதுமணத் தம்பதியினர்




(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாடளாவிய ரீதியில் அரசுக்கெதிரான பொது மக்களின் போராட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இரு நாட்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அஹிம்சை வழியிலான போராட்டம் இந்த நிமிடம் வரை அதே உத்வேகத்துடன் தொடர்ந்து வருகின்றது.

கோட்டாபய ராஜபக்சவை வீட்டிற்கு அனுப்பும் வரை எமது போராட்டம் தொடரும் என கோஷம் எழுப்பி ஒன்று கூடியவர்கள், மழை, வெயில் என எதையும் பொருட்படுத்தாது தற்சமயம் வரை துணிந்து போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அந்தவகையில் நேற்று போராட்டக் களத்தில், புதுமண தம்பதியினர் இருவர் கலந்து கொண்டு அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளனர்.

திருமணம் முடிந்தவுடன் நேரடியாக போராட்டக் களத்தில் கலந்து கொண்டு போராட்டத்தை குறித்த தம்பதியினர். தொடர்ந்துள்ளனர் (ம-7)

# தமிழ் தரப்பு நிபந்தனையின்றி ஆதரவளித்தால் வீதியில் இறங்குவோம்

### எம். கே. சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

நிறைவேற்று அதிகார முறை ஒழிப்போ, அவநம்பிக்கை பிரேரணையோ எதுவாக இருந்தாலும் தமிழ் தரப்புக்கள் நிபந்தனையின்றி ஆதரவளித்தால் பொது மக்களைக் கொண்டு வீதிகளில் இறங்குவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லா பிரேரணையைக்கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தி இறங்கியிருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணியும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய பிரதான மூன்று அணிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆட்சிமுறையை ஒழிப்பது சம்பந்தமாகக் கூட்ட அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சி மாற்றம் கொண்டு வந்து என்ன செய்யப் போகின்றோம். ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. எதுவும் மாறப்போவதில்லை. வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்க வேண்டும்.

சாதாரண பெரும்பான்மை மூலம் மாகாண சபை சட்டத்தின்படி அருகருகே இருக்கக்கூடிய இரண்டு மாகாணங்கள் இணைக்கப்பட முடியும் என்று கூறப்படுகின்றது. பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மூலம் கூட இதனை நிறைவேற்ற முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லாமல் எந்தவித பொருளாதாரத்திற்கும் தீர்வும் கிடையாது. அத்துடன் நிரந்தர சமாதானமும் நல்லிணக்கமோ கிடையாது என்பதை தெளிவாக உணர வேண்டும்.

ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி அதன் பின்னர் நீ யாரோ நான் யாரோ என்ற நிலை தான். நிறைவேற்று அதிகார முறை ஒழிப்போ அவநம்பிக்கை பிரேரணையோ எதுவாக இருந்தாலும் தமிழ் தரப்புக்கள் நிபந்தனையின்றி ஆதரவளித்தால் பொதுமக்களைக் கொண்டு வீதிகளில் இறங்குவோம்" என குறிப்பிட்டுள்ளார். (ம-7,104)

# கைதடியில் விபத்துக்குள்ளானவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் நுணாவில் கைதடியைச் சேர்ந்த சுப்பர் சுதாகர் (வயது- 52) என்பவரே மரணமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதடி பாலத்தடியிலிருந்து கைதடிப் பிள்ளையார் கோவிலை நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த அவரை பின்னால்வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயம் அடைந்த அவர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

# அரச ஆதரவு, எதிர்ப்பு தரப்புகள் இடையே மோதல்

### சிலாபத்தில் பதற்றம்




சிலாபம் நகரில் ஜனாதிபதி பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த குழுவினருக்கும் ஜனாதிபதிக்கு ஆதரவாக போராட்டம் செய்த குழுவினருக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டதால் பதற்றம் நிலவியது.

சிலாபத்தில் நேற்று முற்பகல் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஒரு குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒரு குழுவினர் கோட்டாபய ஆதரவுக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதாக தெரியவருகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்தில் பொலிஸார் களமிறக்கப்பட்டு பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது நாளாகவும் காலி முகத்திடலில்...
















## சுற்றுலாப் பயணிகளும் ஆர்ப்பாட்டத்தில்





### கப்புட்டு காக்கா... பசில்...பசில்

## பிரபல்யமடையும் பசிலுக்கெதிரான பாடல்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திருமண வைபவங்கள் உட்பட வேறு எந்த நிகழ்வுகளுக்கும் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திருமண நிகழ்வில் பசிலுக்கு எதிர்ப்பு வெளியிடும் இசை நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது.

அதன் வீடியோ இணையத்தில் வெளியாகியுள்ளது.

அங்கு "கப்புட்டு காக்கா... பசில்.. பசில்..." என திருமணத்தில் கலந்து கொண்ட அனைவரும் பாடியுள்ளனர்.

மத்தல விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்கும் போது பறவைகள் மோதுவது குறித்து வெளிநாட்டவருடன் ஆங்கிலத்தில் விளக்கம் அளிக்கும் போது கப்புட்டா என அவர் கூறிய வீடியோ வைரலானதை குறிப்பிடத்தக்கது. (நி)

## காலி முகத்திடலில் உதயமானது 'கோட்டா கோ' கிராமம்




### தன்னால் இயன்றதை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்னொவ் அணியை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 20 ஆவது லீக் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சிம்றொன் ஹெட்மியர் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் படிக்கல் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜேஸன் ஹோல்டர் மற்றும் கிருஸ்ணப்பா கௌதம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அவிஷ்கான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 166 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியால், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குயிண்டன் டி கொக் 39 ஓட்டங்களையும் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 4 விக்கெட்டுகளையும் ட்ரெண்ட் போல்ட் 2 விக்கெட்டுகளையும் பிரசீத் கிருஸ்ணா மற்றும் குல்தீப் சென் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயனாக, ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், 4 விக்கெட்டுகளை வீழ்த்திய யுஸ்வேந்திர சஹால் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

# தலைவர் கிண்ண தொடர் குருநகர் பாடும்மீன் வெற்றி




யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தலைவர் கிண்ண உதை பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி அரியாலை உதை பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று முன்தினம் 3 மணிக்கு ஆரம்பமானது.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் பாடும்மீன் அணி தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

அதனை நீக்கிலஸ் அணி தடுத்தாடியது.


பரபரப்பான போட்டியில் மழை வந்து இடையூறு விளைவித்த போதிலும் போட்டி தடங்கலின்றி விறுவிறுப்பாக நடைபெற்றது.

இரண்டாம் பாதியில் பாடும் மீன் அணியினர் பல வாய்ப்புகளை உருவாக்கிய போதும் ஒரு வாய்ப்பு கோலாக மாற நீக்கிலஸ் அணியினை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது பாடும்மீன் அணி. (4-6-106)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2557

**கஜிதா**

என்னை நீ கடந்து செல்லும் போதே ஒரு கணம் நின்று ரசித்து விடு



ஏனெனில் நீ திரும்பி வரும் பொழுது நான் இல்லாமல் கூட போகலாம்...!

**தர்சன்**

என்னை தூக்கி தூர தானே போடுறீங்க..




அப்புறம் எதுக்குடா காய்கறிக்காரன் கிட்ட சண்டை போட்டு என்னை வாங்குறீங்க

**பிரியா**

உன் கண்கள் அழகாய் இருந்தால் அது பிறரைக் கவரும்



உன் செயல்கள் அழகாய் இருந்தால் பிறர் கண்கள் உன்னைக் கவரும்

**தர்ஷா**


அண்ணன் தங்கையின் பாசத்திற்கு முன்னால்



அப்பா அம்மாவின் பாசம் கூட தோற்றுப்போகும்..!

**சந்தோஷ்**

அடுத்தவனுக்கு கிடைத்தது என்று சகமனிதன் பொறாமைப்படாத ஒரே விஷயம்..



மரணம் மட்டுமே.

**மீரா**

மின்னல் மின்னும் போது அம்மாவை கட்டி அணைக்கும் குழந்தைகளுக்கு தெரிந்திருக்கிறது



அம்மா அதை விடபெரிய சக்தி என்று ..!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்கள் எங்கே?
## அரசிற்கெதிராக யாழில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.**




வலிகாமம் வடக்கு மக்களின் ஏற்பாட் டில் தெல்லிப் பழை பிரதேச செயலகத்திற்கு அருகில் குறித்த போராட்டம் இடம் பெற்றது.

அத்தியாவசிய பொருட்கள் எங்கே, வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளை உடனடியாக விடுவி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.(4-5-33-104)

# டீசல் தாங்கியுடன் தொடரூந்து மோதி விபத்து!

(றம்புக்கனை)

றம்புக்கனை தொடரூந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டீசல் தாங்கியின் மீது. பின்னால் இருந்து வந்த தொடரூந்து இயந்திரமொன்று மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தைத் தொடர்ந்து. டீசல் தாங்கியில் எரிபொருள் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும். அதனை தொடர்ந்து எஞ்சியுள்ள டீசல் கையிருப்பு பவுசர்களில் ஏற்றப்பட்டு வருவதாகவும் றம்புக்கனை தொடரூந்து நிலைய பேச்சாளர் தெரிவித்தார்.

பேராதனைக்குக் கொண்டு செல்வதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டீசல் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக அவர்மேலும்தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி.இரத்தினகலாவதி யோகநாதன்

பிறப்பு 05.10.1949 இறப்பு 09.04.2022



யாழ்.கொக்குவில் கிழக்கு பிரம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு குளங்கரை ஒழுங்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினகலாவதி யோகநாதன் அவர்கள் 09.04.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் மனோன்மணி தம்பதிகளின் தவப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் யோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் டுஷிகா , சங்கீதா, தேனுஜா ஆகியோரின் அன்புத் தாயும். காலம் சென்றவர்களான சிவகாருண்யம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவரட்ணம் நேசம்மா அவர்களின் பெறாமகளும் காலஞ்சென்ற முருகேசு பார்க்கியம் அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற பூபதி(ரதி-ஜேர்மனி), இரட்ணமகேசன் (தேவன்-ஜேர்மனி), இரத்தினமலர் (பவா-ஜேர்மனி) , இரத்தினமாலதி (பேபி-ஜேர்மனி), இரத்தினவசந்தி (சாந்தி-லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சந்திரமோகன் , வசந்தரூபி, மாணிக்கராஜா, ரவீந்திரன், காலஞ்சென்ற சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலமுரளி, ஏரகன், மிதிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சறோஜினி, காலஞ்சென்ற சந்திரலேகா, கோணேஸ்வரராஜா, ஜோகபரமேஸ்வரன், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.04.2022 (செவ்வாய்க்கிழமை) இன்று முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(10997)

தகவல் - குடும்பத்தினர்.
077 1190 903 யோகநாதன்
075 7851 249 ஏரகன்

# 19 ஐ கொண்டு வந்தால் சர்வதேசம் ஒத்துழைக்கும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

(கொழும்பு)

20 ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்து செய்து 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வந்தால் சர்வதேசம் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் 19 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்திற்கு நன் மதிப்பு கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ளதுடன் பல யோசனைகளையும் முன்வைத்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் ராஜபக்ஷர்கள் முழுமையாக பதவி விலக வேண்டும் என நாட்டு மக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்புப்போராட்டம் குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.தேசிய நிறைவேற்று சபை ஒன்றை ஸ்தாபித்து அதனூடாக அமைச்சர் களை நியமிப்பது அவசியம் என்றும் இடைக்கால அரசாங்கத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன யோசனை முன் வைத்துள்ளார். (நி)

# இராசிபலன்

12.04.2022
பங்குனி 29 ,செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 3.19 மணிவரை

ஆயிலியம் காலை 6.51 மணிவரை
சுபநேரம்- 10.36-12.06 மணிவரை
இராகுகாலம் -3.06-4.36 மணிவரை

ஏகாதசி விரதம்,
சந்திராஷ்டமம்,
உத்தராடம்

வளவன்

**மேஷம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு மகத்துவம் தரும்.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர் பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தொழில் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் கைகூடும் வாய்ப்புண்டு,தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**
இனிய அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


**கன்னி**
சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாடு ஆனந்தம் தரும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மீனம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்,ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

மனிதனுடைய வலிமையை அழிப்பவை மூன்று அச்சம், கவலை, நோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மங்கள நாதர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில், தமிழ்நாடு பேரூர் ஆதீன சுவாமிகள், தமிழ்நாடு தருமபுரம் ஆதீன சுவாமிகள், நல்லை ஆதீன சுவாமிகள், தென்கயிலை ஆதீன சுவாமிகள், நல்லூர் சிவகுரு ஆதீன சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு அருளாசி வழங்கினர். (படங்கள்:- ரவிசாந்)

# கடற்படையினரின் படகுகள் விபத்து கடற்படை வீரர் ஒருவர் மாயம்

(அராலி)

காரைநகர் கடற்படையினர் மற்றும் நெடுந்தீவு கடற்படையினரின் படகுகள் ஒன்றையொன்று மோதி விபத்துக்குள்ளானதில் கடற்படை வீரர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் இரண்டு கடற்படை படகுகளும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு படகு செல்வதை கடற்படையினர் அவதானித்தனர்.

இந்நிலையில் குறித்த படகினை இரண்டு கடற்படை படகுகளும் துரத்திக் கொண்டு சென்றவேளை இந்த விபத்து சம்பவித்துள்ளது. காணாமல் போன கடற்படை வீரரை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (4-5-104)

# மேலும் ஒரு மலேரியா நோயாளி யாழ். போதனாவில் கண்டறிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் மலேரியா நோயாளி ஒருவர் இனம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஒருவரே மலேரியா காய்ச்சலுடன் இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சில நாட்களுக்கு முன்னர் நைஜீரியா நாட்டில் இருந்து திரும்பி வந்ததாகவும் , அந்நிலையில் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளாகிய நிலையில் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதன் போது குறித்த இளைஞனுக்கு மலேரியா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.(4-5-18-33-104)



கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் நெற்புலவு பூநகரி முன்பள்ளியின் வருடாந்த விளை யாட்டு நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. (படம்:- கிருஸ்ணகுமார்)

# ஐஸ் போதைப் பொருளுடன் நெடுந்தீவில் மூவர் கைது

(அராலி)

நெடுந்தீவு கடலில் வைத்து ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நாச்சிக்குடாவையும் ஒருவர் கொடிகாமத்தையும் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு கடற்படையினரின் விசேட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கடற்படையினர் அவர்களை நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தவுள்ளனர். (4-5-104)

# பயங்கரவாத சட்டத்தை நீக்ககோரி ஜனாதிபதிக்கு கடிதம்

## சாவ. நகர சபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் குறித்த சட்டத்தின் கீழ் கைதானவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப சாவகச்சேரி பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் சமர்ப்பித்த பிரேரணைக்கு ஆதரவளித்து சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தனது பிரேரணையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆதாரபூர்வமற்ற பொய் குற்றச் சாட்டுக்களை முன்வைத்து பல அப்பாவிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைதானவர்களை பிணையிலோ அல்லது முழுமையாகவோ விடுதலை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை சபையில் ஏகமனதாக நிறைவேற்றி தீர்மானப் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். குறித்த பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தீர்மானப் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவும் முடிவெடுக்கப்பட்டது. (4-5-30)

# 'பசுமை' கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஓராயம் அமைப்பின் ஏற்பாட்டில் "பசுமை" எனும் தலைப்பில் கண்காட்சி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை ஆனைக்கோட்டை, உயரப்புலம் பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள உதயசீலன் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி.யசோதா உதயகுமார், யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி சுலோசனா முருகநேசன், யாழ் பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா ஸ்ரீரங்கன் ஆகியோர் கலந்து கொள்வர். (4-5)

# கைதடியில் இளைஞன் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த 32வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா அரசு பதவி விலக வேண்டும்

# மகாசங்கத்தினரின் நிலைப்பாடும் இதுவே

## என்கிறார் ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

**மக்களின் வெறுப்பை முழுமையாக பெற்றுள்ள ஜனாதிபதி உட்பட அவர் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பதே மகாசங்கத்தினரது தற்போதைய நிலைப்பாடாக உள்ளது.**

போராட்டத்தில் ஈடுப்படுபவர்கள் மகாசங்கத்தினரை விமர்சிப்பது முற்றிலும் தவறானது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிபிடிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தின் தவறான நிதி முகாமைத்துவத்தினால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. கொவிட் தாக்கத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என அரசாங்கம் குறிப்பிடும் காரணத்தை நாட்டு மக்கள் எவரும் ஏற்றுக்கொள்ள போவதில்லை.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்திற்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கையை காட்டிலும் பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்ட நாடுகள் கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் அளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளமை அவதானத்திற்குரியது.

நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கவில்லை. எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரத்துறை ஆகிய அடிப்படைச் சேவை விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டதை தொடர்ந்து நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றிணைந்து வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.



ஜனாதிபதி உட்பட அவர் தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் கடுமையாக வெறுக்கிறார்கள். ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பது மகாசங்கத்தினரது தற்போதைய நிலைப்பாடாக உள்ளது.

அரசதலைவர்களை நல்வழிப்படுத்தி. ஆட்சியதிகாரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கான ஆலோசனை வழங்கும் பொறுப்பு மகாசங்கத்தினருக்கு உண்டு.

நல்ல ஆலோசனைகளை ஆட்சியாளர்கள் கேட்க மறுத்தால் மக்களால் அவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதற்கு தற்போதைய நிலைமை சிறந்த எடுத்துக்காட்டு என தேரர் தெரிவித்தார். (நி)

## எரிவாயு தொடர்பில் 1311 க்கு முறையிடலாம்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிக்கப்படமாட்டாது. நிர்ணய விலைக்கு மேலதிகமான எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்யும் தரப்பினருக்கு எதிராக 1311 என்ற விசேட முறைப்பாட்டு இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்யுமாறு லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (நி)

## ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று 327.49 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல், அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 316.79 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அனுமதி பெற்ற பல வர்த்தக வங்கிகள் நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையை 330 ரூபாவாக அறிவித்துள்ளன. (நி)

## A4 காகித உற்பத்தி ஆரம்பம்

(கொழும்பு)

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில், A-4 காகித உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்ட A-4 காகிதங்கள் உரிய தரத்துடன் வெற்றிகரமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஜயம்பதி பண்டார ஹீன்கந்த தெரிவித்துள்ளார்.

மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் மாத்திரம் சிக்கல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் உதவியுடன், மூலப்பொருட்களைப் பெற்றுக் காகித உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

இதன்மூலம், காகிதங்களுக்கான இறக்குமதிச் செலவினத்தை கட்டுப்படுத்தி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்க முடியும் என தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஜயம்பதி பண்டார ஹீன்கந்த தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 22 ¼ சூரி 9 செவ் 12 இல்
உயரம் :5'6"
தகைமை/தொழில்: BSc, Engineering (civil)
எதிர்பார்ப்பு:படித்த நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/12491

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 42 சூரி 10 செவ் 11 இல்
உயரம்:5'11"
தகைமை/தொழில்:IT மனித வள முகாமைத்துவ உத்தியோகத்தர் (தனியார்)
எதிர்பார்ப்பு :அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12492

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம் : பூசம் 3
கி.பா: 52 சூரி 4 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சொந்தக்கடை (லண்டன்)
எதிர்பார்ப்பு:ஆங்கில அறிவுள்ள படித்த பெண்
தொ.இ: B/12493

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 4
கி.பா:சூரி 8 செவ் 6 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc(Hons) in IT தொழில் நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/12494

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 27 சூரி, செவ் 4 இல்
உயரம்:155 cm
தகைமை/தொழில்: B.com 2 வருட மாணவி முகாமைத்துவ அலுவலர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12531

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்:சதயம் 3
கி.பா:23 ¾ சூரி 5 செவ் 6 இல்
தகைமை/தொழில்: BSc(Accounting-'J' pura, ACMA+CGMA(U.K) world Trade center உதவி முகாமையாளர்
எதிர்பார்ப்பு:மணமகளின் கல்விக்கும் தொழிலுக்கும் ஏற்ற பொருத்தமான மணமகன்
தொ.இ:G/12532

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 8 ¼ சூரி 12 செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bachelor of Software Engineering (Hons)
எதிர்பார்ப்பு :தகுந்த தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12536

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: சூரி 10 செவ் 11 இல் உயரம்:163 cm
தகைமை/தொழில்: ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் பட்டதாரி
தொ.இ:G/12539

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.






# 2வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்
இதயகாந்தன்
யஸ்மிகன்

இருபாலை கிழக்கு,
கேணிக்குளத்தடியைச் சேர்ந்த
இதயகாந்தன் - ஜனந்தனி(சிந்து)
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
"யஸ்மிகன்"
12.04.2022 செவ்வாய்க்கிழமை தனது
இரண்டாவது பிறந்த நாளை
கொண்டாடுகிறார்.

யஸ்மிகனை அப்பா, அம்மா, கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதியைச் சேர்ந்த அப்பம்மா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, அஜீபன் மாமா, லக்ஷாயினி மாமி, தர்மிகா சித்தி, செந்தூரன் பெரியப்பா குடும்பம் (மன்னார்) மற்றும் அப்பப்பாமார் அம்மம்மாமார், உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.


அன்புடன் வாழ்த்தும்:
தவராஜா - ராதா தேவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 18

# எச்சந்தர்ப்பத்திலும் சுயமரியாதையை இழக்காதே!



ஹோட்டல் உரிமையாளர் சாதம் பரிமாறு வதற்காக ஒரு பெரியவர் அமர்ந்திருந்த டேபிள் அருகே குனிந்த போது அந்த பெரியவர் கேட்டார்..... மதிய உணவுக்கு எவ்வளவு பில் போடுவீர்கள்... உரிமையா ளர் சொன்னார்... பொரியல், கூட்டு குழம்பு டன் ரசம் மற்றும் தயிர் 100 ரூபாய். தயிர் இல்லா மல் 80 ரூபாய். கிழிந்த சட்டை பாக்கெட்டில் இருந்து, கசங்கிய 20 ரூபாய் தாளை எடுத்து, உரிமையாளரை நோக்கி நீட்டினார்... இதுவே என் கையில் உள்ளது.. இதற்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு போடுங்க.... வெறும் சாப்பாடானாலும் பர வாயில்லை... மிகுந்த பசி. நேற்று முதல் எதுவும் சாப்பிடவில்லை என்று சொல்லத் தயங்கும் அவரது வார்த்தைகள்.

அவரது தொண்டையோ நடுங்குகிறது.... ஹோட்டல் உரிமையாளர் குழம்போடு... அனைத்தையும் அவருக்கு பரிமாறினார். அவர் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.... அவர் கண்களில் இருந்து கண்ணீர் மெலிதாக கசிந்தன... நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்..? எனக் கேட்ட உரிமையாளரைப் பார்த்து கண்களை மூடிக்கொண்டு சொன்னார்... எனது கடந்த கால வாழ்க்கையை நினைத்து கண்ணீர் வடிக்கிறேன்.... எனக்கு மூன்று குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண்..... மூவருமே நல்ல வேலையில் இருக்கிறார்கள்....

நான் சம்பாதித்த ஒவ்வொரு பைசாவையும் அவர்களின் உயர்வுக்காக செலவழித்தேன். அதற்காக என் இளமையையும், 28 ஆண்டுகால பௌதிக வாழ்க்கையையும் இழந்து புலம் பெயர்ந்தேன்... எல்லாவற்றுக்கும் மேலாக என் மனைவி என்னை முதுமையில் தனியே தவித்து விட்டு மேலே போய்விட்டாள்....

சொத்து பிரிவினை செய்ய ஆரம்பித்ததில் இருந்து என் மகன்கள், மகள் என்னைத் ஒதுக்கி வைக்க ஆரம்பித்தார்கள்.

நான் அவர்களுக்குச் சுமையானதை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தேன்.

மெல்ல மெல்ல என்னைத் ஒதுக்கி வைக்க ஆரம்பித்தார்கள்....எனக்கு வயதாகிவிட்டதல்லவா...

குறைந்தபட்சம் என் வயதிற்காகவாவது மதிப்பு தரக்கூடாதா? அவர்கள் அனைவரும் சாப்பிட்ட பிறகு தான் நான் இரவு உணவிற்கு செல்வேன்,

பேரக் குழந்தைகள் என்னிடம் பேசுவதே இல்லை. அப்படி பேசுவதை பார்த்தால் அம்மா அப்பா அடித்து விடுவார்களோ என்ற பயம்...

இந்த வேதனையடுப்பில் அங்கு எப்படி வாழ முடியும்.. இரவும் பகலும் வியர்வை சிந்தி, நல்ல தூக்கமின்றி உழைத்து, விரும்பியதை சாப்பிடாமல், அவளும் நானும் சேர்த்த பணத்தில் வாங்கிய இந்த வீடு... எல்லாம் இருந்தும் நான் இப்போது நடுத்தெருவில்... ஆனால் நான் என்ன செய்வது? மருமகளின் தங்கத்தை திருடிவிட்டதாக - சாக்குப்போக்கில்- திருடனாக முத்திரை குத்தப்பட்டேன்... மகன் கோபமடைந்தான், நல்லவேளை கை நீட்டவில்லை. அந்த பாவத்தை அவன் செய்யவில்லை.

அது என் அதிர்ஷ்டம். அங்கேயே நான் இருந்து இருந்தால் அது நிகழ்ந்து இருந்தாலும் இருக்கலாம், இப்படியாக தன் பேச்சை நிறுத்திக் கொண்ட முதியவர், சாப்பாட்டின் நடுவில் எழுந்தார்.. உரிமையாளர் முன் 20 ரூபாய் தாளை எடுத்து நீட்டினார்.. ஆனால் உரிமையாளர் பணத்தினை வாங்கவில்லை, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாம்... நீங்கள் எப்போதும் மதிய உணவு சாப்பிடலாம்" என்றார்.

ஆனால் அந்த மனிதர் அந்த 20 ரூபாயை அங்கேயே அவர் மேசை மீது வைத்துவிட்டு.... உங்கள் உதவிக்கு மிக்க மகிழ்ச்சி... என்னை பற்றி என்ன நினைக்கிறாய்...? சுயமரியாதை என்னை விட்டு என்றும் விலகாது, வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஒரு சிறு துணி மூட்டையையும், கைத்தடியையும் எடுத்துக்கொண்டு திக்கு தெரியாத இடம் நோக்கி மெல்லக் கிளம்பினானர்... அந்த மனிதர் என் மனதில் ஏற்படுத்திய வலி இன்று வரை ஆறவில்லை.

## செயற்கைக் காலுடன் நடக்கும் யானை



கால் இல்லாத யானை ஒன்றுக்கு செயற்கைக் கால் பொருத்தி நடக்க வைக்கும் யானைப்பாகனுக்கு இணையத்தில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. இந்த அரிய காட்சி டுவிட்டரில் பகிரப் பட்டுள்ளது. (நி)

## சொர்க்கத்தில் உன்னை சந்திக்

### போரில் இறந்த தாயின் நினைவாக கடிதம் எ



(கீவ்)

போரில் தனது தாயை இழந்த உக்ரைன் சிறுமி, அவரது நினைவாக உருக்கமாக எழுதிய கடிதம் இணையதளத்தில் வைரலாகி உள்ளது.

அந்நாட்டின் போரோடியன் நகரில் பலியான பெண் ஒருவரி நினைவாக அவரது 9 வயது ம எழுதிய கடிதத்தை உள்து

## உயிர்த்த ஞாயிறை

### போர் நிறுத்தத்தை அமுல்

### ரஷ்ய, உக்ரைனிடம் போப் ே

(வத்திக்கான்)

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு ரஷ்யாவும் உக்ரைனும் சண்டை நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வத்திகானிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக உயிர்த்த



ஞாயிறு பண்டிகையையொட்டி உ ரைனில் போர் நிறுத்தம் மேற்கெ ளப்பட வேண்டும்.

மக்களின் நன்மையைக் க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# வெடித்து சிதறிய மைகோலைவ் நகரம்

## உக்ரைன் தெற்குப் பகுதியில் ரஷ்யப் படை தாக்குதல்

(கீவ்)

**உக்ரைனின் தெற்குப் பகுதி நகரான மைகோலைவ் மீது ரஷ்யப் படைகள் மிகப்பெரிய குண்டு வெடிப்பு தாக்குதல் நிகழ்த்தி இருக்கும் நிலையில் அது குறித்த வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.**



உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெற்று வரும் நிலையில், உக்ரைனின் பல்வேறு நகரங்களில் ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதற்கு உக்ரைன் இராணுவத்தினர் பதிலடி கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், மைகோலைவ் நகரத்தின் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். (நி)

## ...க்கிறேன் அம்மா

### ... எழுதிய உக்ரைன் சிறுமி



...யன்கா ...நவரின் ...து மகள் ...ர்துறை

அமைச்சரின் ஆலோசகரான ஆண்டன் டுவிட்டரில் பகிர்ந்துள்ளார். தனது தாய் உலகத்திலேயே மிகச்சிறந்த தாய் என்றும், தற்போது சொர்க்கத்தில் அவர் மகிழ்ச்சியாக இருப்பார் என நம்புவதாகவும் கடிதத்தில் சிறுமி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்ல மனிதராக வாழ்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு தான் சொர்க்கத்தில் இடம் பெற்று, அங்கு தனது தாயை சந்திப்பேன் என்றும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. உக்ரைன் சிறுமியின் கடிதத்தை பலரும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். (நி)

## அமெரிக்க குழந்தைகளுடன் சீன விண்வெளி வீரர்கள் கலந்துரையாடல்



(வோஷிங்டன்)

விண்வெளி ஆராய்ச்சியில் உள்ள சீன வீரர்கள், அங்கிருந்தவாறே நேரலை மூலம் அமெரிக்க குழந்தைகளின் சந்தேகங்களுக்கு தீர்வு அளித்தனர்.

தனி விண்வெளி நிலையத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சீனா அதற்காக வீரர்களை அனுப்பி கட்டமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பணியின் இடையே பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபட்டு அதனை வீடியோவாக வீரர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க குழந்தைகளின் விண்வெளி தொடர்பான சந்தேகங்களுக்கு சீன வீரர்கள் பதிலளித்தனர். (நி)

# ரஷ்ய எல்லையில் நிரந்தரமாக படைகளை நிறுத்தும் நேட்டோ

(பிரஸ்ஸல்ஸ்)

ரஷ்ய எல்லையில் படைகளை நிரந்தரமாக நிறுத்துவதற்கு நேட்டோ நாடுகள் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் நாடு நேட்டோ அமைப்பிலும் ஐரோப்பிய யூனியனிலும் சேர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. நேட்டோ நாடுகளுடன் அண்டை நாடான உக்ரைன் சேரும் போது அது தங்கள் நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று ரஷ்யா தரப்பில் கருதப்படுகிறது.

ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அந்நாட்டின் மீது உலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவை அங்கம் வகிக்கும் நேட்டோ அமைப்பு அதிரடி முடிவு ஒன்றை எடுத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


எதிர்காலத்தில் ரஷ்யா மற்ற சில நாடுகள் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பிருப்பதாக நேட்டோ அமைப்பு கணித்துள்ளது.

இதனை தவிர்க்கும் வகையில் ரஷ்ய எல்லையில் படைகளை நிறுத்துவதற்கு நேட்டோ அமைப்பு முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடின் மேற்கொண்ட நடவடிக்கைகள், அதிருப்தியை அளித்துள்ளது. எதிர்காலத்தில் எந்த எல்லைக்கும் புடின் செல்வார் என்று நேட்டோ விமர்சித்துள்ளது. (நி)

## ... முன்னிட்டு ...ல்படுத்துங்கள்


### ... வேண்டுகோள்



...ட்டி உக் ...ற்கொள் ...க் கருத்

தில் கொண்டு நாடுகளின் தலைவர்கள் சில தியாகங்களைச் செய்ய வேண்டும்' என அவர் தெரிவித்தார். (நி)

## கிம் ஜாங் உன் பதவி ஏற்று 10 ஆண்டுகள் நிறைவு



(பியாங்யாங்)

வட கொரிய ஜனாதிபதியாக கிம் ஜாங் உன் பதவி ஏற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நடை பெற்ற கட்சியின் தேசிய கூட்டத்தில் அவரது உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. (நி)

# நவாஸ் ஷெரீப் வீட்டை முற்றுகையிட்ட இம்ரான்கான் கட்சியினர்

(லண்டன்)

பாகிஸ்தானில் சுதந்திர போராட்டம் மீண்டும் தொடங்குகிறது என முன்னாள் பிரதமர் இம்ரான்கான் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இம்ரான்கான் அரசு க்கு எதிராக 174 உறுப்பி னர்கள் வாக்களித்தனர். இதையடுத்து, பிரதமர் பதவியில் இருந்து இம்ரான்கான் நீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கிடையே, அந்நாட்டு புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைவரான ஷாபாஸ் ஷெரீ



ப்பை தேர்வு செய்ய எதிர்க் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இங்கிலாந்தின் லண்டன் நகரில் அமைந்துள்ள முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் வீட்டை பாகிஸ்தான் தெஹ்ரிக் இன்சாப் கட்சி தொண்டர்கள் முற்றுகையிட்டனர். அவருக்கு எதிராக கோஷமிட்டனர்.

முற்றுகை போராட்டத்தைத் தொடர்ந்து பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை' மருத்துவர்கள், ஊழியர்கள் போராட்டம்

(பனிக்கன்குளம்)

நாட்டின் தற்போதைய நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது இதனால் மக்கள் பல்வேறு தேவைகளுக்கும் வரிசையில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது இவ்வாறான பின்னணியில் மக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதையும் மருந்து பொருட்களின் தட்டுப்பாட்டு நிலையினையும் வெளிக்காட்டும் முகமாக நேற்று மருத்துவ மனை முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.



மாங்குளம் மருத்துவ மனை மருத்துவர்கள், ஊழியர்கள் இணைந்து மருத்துவ மனை முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை, மக்களின் உயிர்களுடன் விளையாட வேண்டாம் மருத்துவப் பற்றாக்குறையை நிவர்த்திசெய், இலவச சுகாதாரம் ஆபத்தில் உள்ளது அனைவரது உயிர்களும் ஆபத்தில் உள்ளன, இன்று இலவச மருத்துவம் இழந்த நிலையில் இலங்கை மக்கள், போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-281)

# மன்னாரில் கடும் மழை இயல்பு நிலை பாதிப்பு



(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை. காரணமாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையும் காணப்பட்டது.

மேலும் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு,பல வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது இதனால் மன்னார் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. (4-5-285)



**பங்குனித்திங்கள் விரத உற்சவமானது நேற்று வரலாற்று சிறப்பு மிக்க தென் மராட்சி - மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது.**

**(படம்-கஜிந்தன்)**



தொழில்துறை திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் விதாதா வளநிலையமும் இணைந்து நடத்திய புதுவருட கண்காட்சியும் விற்பனை சந்தையும் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

(படம்- மகாலிங்கம்)

# நடுக்கடலில் தவறி விழுந்து மீனவர் மாயம்

## தேடும் பணி தீவிரம்

(மன்னார்)

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த சேராங்கோட்டை கடற்கரையில் இருந்து கடந்த சனிக்கிழமை 12 மீனவர்கள் நாட்டுப்படகில் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

மீனவர்கள் தனுஷ் கோடி அருகே மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அந்த படகில் இருந்த மீனவர் முனியராஜ் கடலில் தவறி விழுந்து காணாமல் போனார்.

நடுக்கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரை தொடர்ந்து சனிக்கிழமை இரவு வரை சக மீனவர்கள் தேடி வந்த நிலையில் கடலில் விழுந்து காணாமல் போன மீனவர் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீன்வளத்துறை அதிகாரிகள், மெரைன் பொலிஸ் மற்றும் இந்திய கடலோர காவல் படை. அதிகாரி ஆகியோரிடம் கடலில் மாயமான மீனவரை மீட்டு தர கோரி மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதன் அடிப்படையில் இராமேஸ்வரம் மெரைன் பொலிஸ், மற்றும் மண்டபம் கடலோர காவல் படைக்கு சொந்தமான ரோந்து படகுகளின் உதவியுடன் தொடர்ந்து கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரை நடுக்கடலில் தேடிவருகின்றனர்.(4-5-285)

# உப உணவு செய்கை தொடர்பில் மழைக்கு பின் தீர்மானம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் உப உணவு பயிர்ச் செய்கை தற்போது பெய்து வரும் மழைக்குப் பின்னர் தீர்மானிக்கப்படும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும். தெரிவித்ததாவது. வவுனிக்குளத்திற்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நடைபெற்று விவசாய முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை வவுனிக்குளத்தில் சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டு தற் போது பெய்து வரும் மழை யின் பின்னர் குளத்தின் நீர் நிலவரத்திற்கேற்றவாறு உப உணவுப் பயிர்ச் செய்கை தீர்மானிக்கப்படும் என தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் விவசாயிகள் கூடுதலாக ஈடுபட வேண்டும் என அதிகாரிகளினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

உப உணவுப் பயிர்ச் செய்கை இலாபம் தரும் பயிர்ச் செய்கையாக உள்ளதன் காரணமாக விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 260 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 185 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 500 |
| தக்காளி | 300 | 180 | 160 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 120 | 80 |
| கோவா | 100 | 120 | 100 | 100 |
| கரட் | 160 | 170 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 70 | 100 |
| புடோல் | 150 | 120 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 220 | 100-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 250 | 270 | 300 |
| பாகற்காய் | 350 | 300 | 330 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 140 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 180 | 160 |
| பயற்றங்காய் | 380 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 160 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 120 | 200 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 280 | 400 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 260 | 250 | -- | 280 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 350 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 200 | -- | 320 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | -- | -- | 30 | 40 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## எட்டில் வந்தது குருபகவான்; இனி எல்லாம் நலமாகும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**கூப்பிட்டுப் பேசுபவர்களுக்கு மத்தியில் கும்பிட்டுப் பேசும் சிம்ம இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 13.4.2022 முதல் 8ஆம் இடத்திற்குச் செல்கிறார்.

சுமார் ஓராண்டு காலம் அங்கு வீற்றிருந்து அதன் பார்வை பலத்தால் உங்களுக்கு நன்மைகளை வழங்கப் போகிறார்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களில் சுப கிரகமாக கருதப்படும் குரு பகவான், உங்கள் இராசிக்கு பஞ்சம, அஷ்டமாதிபதியாக விளங்குபவர்.

அவர் உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில், தன்னுடைய சொந்த வீட்டில் இருப்பதால் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்த மாட்டார்.

சிறுசிறு உடல் தொந்தரவுகள், மருத்துவச் செலவுகளை ஏற்படுத்துவார். அதையும் சுபவிரயங்களாக மாற்றிக் கொண்டால் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம்.

இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குரு பார்வையால் தன ஸ்தானம் புனிதமடைவதால் அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களை, குரு பார்க்கப் போகிறார். வாக்கு, தனம், குடும்பம், தாய், வீடு, வாகனம், சுகம், பயணம், வெளிநாடு போன்ற ஆதிபத்யங்களை எல்லாம் குரு பகவான் பார்க்கிறார்.

எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து உங்களுக்கு நல்ல பலன்களைத் தரப் போகிறது. 2ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால், பணப்புழக்கம் நன்றாக இருக்கும். அதே சமயம் விரய ஸ்தானத்தையும் குரு பார்ப்பதால் வீண் விரயம் ஆகாமல், சுபவிரயமாக மாற வழி ஏற்படுத்தும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் வீடு கட்டும் வாய்ப்பும், அசையாச் சொத்து வாங்கும் வாய்ப்பும் கைகூடி வரும். தாயின் உடல் நிலை சீராகும் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள், இப்பொழுது பல மடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி, அதன் மூலம் ஒரு பெரும் தொகை கிடைக்கலாம்.

12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால், சுபச் செய்திகள் வந்தபடி இருக்கும். மங்கள ஓசை மனையில் கேட்கும். நீண்ட நாட்களுக்குப் பிறகு நீண்டதூரப் பயணங்கள் உறுதியாகும். ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள் சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (13.4.2022 முதல் 30.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு பஞ்சம, அஷ்டமாதிபதியானவர் குரு. அவர் பூரட்டாதி நட்சத்திரக் காலில் தன்னுடைய சுய சாரத்தில் சஞ்சாரம் செய்யும்பொழுது, நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில் போட்டிகள் அகலும். வியாபார விருத்தியை முன்னிட்டுப் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள்.




**சனி சாரத்தில் குரு சஞ்சாரம் (1.5.2022 முதல் 24.2.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சனி பகவான். அஷ்டமாதிபதியான குரு, உத்திரட்டாதி நட்சத்திரக் காலில் 6-க்கு அதிபதியான சனியின் சாரத்தில் சஞ்சரிக்கும் போது, விபரீத ராஜயோக அடிப்படையில் நல்ல பலன்கள் உங்கள் இல்லம் தேடிவரப்போகிறது.

எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்கி அதில் இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் பூர்த்தியாகும். இரும்பு, இயந்திர வியாபாரம் செய்பவர்களுக்கும் இது ஒரு பொற்காலமாக அமையும்.

**புதன் சாரத்தில் குரு சஞ்சாரம் (25.2.2023 முதல் 22.4.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். ரேவதி நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நற்பலன்கள் உண்டாகும்.

குறிப்பாக மித மிஞ்சிய பொருளாதாரமும், தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இருமடங்கு இலாபமும் கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**குருவின் வக்ர இயக்கம் (20.7.2022 முதல் 16.11.2022 வரை)**

உங்கள் இராசிக்கு பஞ்சம, அஷ்டமாதிபதியாக விளங்குபவர், குரு பகவான். எனவே அவரது வக்ர காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடக்கும்.

இருப்பினும் நன்மைகளே அதிகம் நடைபெறும் என்று நம்பலாம். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க சீர்வரிசைப் பொருட்களை வாங்கலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சி நன்மை தரும் விதம் அமையும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்குறை அகன்று மகிழ்ச்சி தரும். திருமண வயதடைந்த பிள்ளைகளுக்கு கல்யாணக் கடமைகளை முடிப்பீர்கள். உங்கள் பெயரிலேயே புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும்.

**வளம் தரும் வழிபாடு**

இல்லத்து பூஜையறையில் தினமும் சிவபுராணம் பாடி சிவனையும், உமையவளையும் வழிபடுவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வீர இளைஞன்

(நேற்றைய தொடர்ச்சி)

அவனைப் பற்றிக் கேள்விப்பட்ட அந் நாட்டு மன்னன் அவனை அரண்மனைக்கு வரவழைத்தான். அவன் மன்னனைக் காணச் சென்ற போது இளவரசியும் அங்கே இருந்தாள். மன்னன் அவனிடம் "நீ வெகு நேரம் கடலினுள் இருக்க முடியுமாமே. உனக்கு இணையாக இதில் யாருமே இல்லையாமே. இது உண்மைதானா?" என்று கேட்டான்.



மீனவனின் மகனும் "மற்றவர்களைப் பற்றித் தெரியாது. நான் கடலுக்குள் வெகு நேரம் இருக்க முடியும்" என்றான். அதைப் பரீட்சிக்கலாம் என்று கூறி மன்னன் தன் மகளோடு தன் கப்பலில் ஏறிக் கொண்டு மீனவனின் மகனையும் ஏற்றிக் கொண்டான். கப்பல் நடுக்கடலில் சென்ற போது மன்னன் ஒரு தங்கக் கிண்ணத்தைக் கடலுக்குள் போட்டு விட்டு மீனவனின் மகனிடம் அதை எடுத்து வரச் சொன்னான். அவனும் கடலில் குதித்து மூழ்கி தங்கக் கிண்ணத்தையும் கடலடியில் இருந்த ஒரு பவளக் கொடியையும் எடுத்து வந்தான். கிண்ணத்தை மன்னனிடமும் பவளத்தை இளவரசியிடமும் கொடுத்தான், மன்னன் அக் கிண்ணத்தை அவனுக்குப் பரிசாக அளித்தான்.

பிறகு. அவன் மீனவனின் மகனிடம் "நீ நமது தீவைச் சுற்றி வந்து என்னென்ன கடலுக்கு அடியே உள்ளன என்று சொல்ல வேண்டும்" என்றான். அதற்கு அவன் "அதைச் சொல்ல முடியும். ஆனால் கடலுக்குள் தீவைச் சுற்றி வரக் கொஞ்ச காலம் பிடிக்குமே" என்றான்.

மன்னனும் "அது எனக்குத் தெரியும். அதுவரை காத்திருக்கிறேன்" என்றான். மீனவன் மகனுக்குக் கடலுள் தீவைச் சுற்றி வர மூன்று மாதங்கள் பிடித்தன. அவன் திரும்பி வந்து மன்னனிடம் "அரசே! இந்தத் தீவு மூன்று பெரும் பாறைகளின் மீது நிற்கிறது. அவற்றில் இரண்டு பாறைகள் உறுதியாக உள்ளன. ஆனால் ஒரு பாறை மட்டும் அதற்கு அடியே உள்ள வடவாக்கினியால் கரைந்து கொண்டே இருக்கிறது" என்றான்.

மன்னனும் "வடவாக்கினியா! அப்படி ஒரு அக்னி கடலுக்குள் இருப்பதாகக் கேள்விபட்டிருக்கிறேனேயொழிய அதைக் கண்ணால் கண்டதில்லை.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்

69

### தமிழ் முனிவர் அகத்தியர் சந்திப்பு



சரவங்கன் இறுதியாத்திரை இராம இலக்குவரைத் துயரத்தில் ஆழ்த்தியது. சரவங்கனது ஆசிரமத்தைவிட்டுச் சுமை நீங்கிய உணர்வோடு மெதுவாய் அவர்கள் நடந்தனர் விண்ணை முட்டும் மலைகளையும், பசுமை நிறைந்த மரங்களையும், கடுமையான பாறைகளையும், ஓடும் நதிகளையும், சரியும் சாரல்களையும், நீர்த் தடாகங்களையும் கடந்தனர் வழி நெடுக அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சந்தித்தவர் தாம் அடைந்து வரும் இன்னல்களை எடுத்துரைத்தனர்.

அரக்கர் இழைக்கும் அநீதிகளை எடுத்துக் கூறி, அவர்களை அழித்து அறம் தழைக்கச் செய்ய வேண்டும்" என்று வேண்டினர்.

"நாட்டை விட்டுக் காட்டை அடைந்ததும் ஒரு வகையில் நல்லதாயிற்று" என்று இராமன் கருதினான். வருந்தி வாடும் அருந் தவசியர் இடையில் அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களை மகிழ்வித்தான். எந்தவித இடையூறும் இன்றி, இனிமையாய்ப் பத்து ஆண்டுகள் அவர்களைக் கேளாமலே கழிந்து சென்றன.

வேதம் கற்ற முனிவரிடைப் பழகிய இராமன், தமிழ் கற்ற அகத்தியரைக் காண விரும்பினான். அகத்தியர் இருக்கும் இடம்தேடி நடந்தான். கதீக்கணன் என்னும் முனிவனைச் சந்தித்து, அகத்தியர் வாழும் மலையை அறிய விரும்பினான்.

அகத்தியர் செய்த அரிய செயல்கள், கதைகளாகப் பேசப் பட்டன. அவற்றுள் இது ஒன்று. தேவர்களை எதிர்த்துத் தப்பி ஓடிய அவுணர் கடலில் புகுந்து ஒளிந்து கொண்டனர்.

அவர்களைத் தேடித் தரும்படி தேவர் வேண்டினர். கடலைக் குடித்து அகத்தியர் அவர்களைக் காட்டிக் கொடுத்தார் என்பது ஒரு கதை.

வாதாவி என்பவன், முனிவர்களில் வயிற்றில் ஆட்டிறைச்சியாகப் புகுந்து, அவர்கள் வயிற்றைக் கிழித்து வெளியே வந்தான். அக் கொடியவனை விழுங்கி, வயிற்றின் உள்ளே உருத் தெரியாமல் சீரணித்து அழித்த கதை அடுத்த கதையாகும்.

பார்வதி திருமணத்தில் இமய மலையில் தேவர் குவிய வடக்கு உயர்ந்தது. தெற்கு தாழ்ந்தது. அதைச் சமன்படுத்த அகத்தியர் தென் திசை அனுப்பப்பட்டார். அது முதல் பொதிகை மலையில் அவர் தங்கினார் என்பது அடுத்த கதை.

"சிவபெருமான் வடமொழி இலக்கணத்தைப் பாணினிக்கும், தமிழ் இலக்கணத்தை அகத்தியருக்கும் அருள் செய்தார்" என்பது மற்றொரு கதை.

'அகத்தியரே தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக் கணம் வகுத்துக் கொடுத்தார்' என்று பேசப்படுகிறது. இத் தகைய பெருமைமிக்க தமிழ் அறிஞரைச் சந்திப்பதில் இராமனுக்குப் பேரார்வம் ஏற்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதந்திரம் தனக்கந்திரம்.
- முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மானுக்கு எய்த அம்பு நரியைப் பதம் பார்த்த கதை

வேடுவன் ஒருவன் மானை வேட்டையாடுவதற்காக ஒரு மரத்தின் மேல் பரண் அமைத்து அமர்ந்திருக்கிறான்.

இதனைப் பார்த்த நரியொன்று ஒரு பற்றைக்குள் மறைந்திருந்தது.

மானை வேட்டையாடும் வேடன் அதனை இறைச்சியாக்கும்போது, அதன் எச்ச சொச்சங்களைத் தான் சுவைக்கலாம் என்ற தந்திரத்தில் நரி அவ்வாறு மறைந்திருந்தது.

அந்நேரம் பார்த்து மானொன்று அவ்வழி வந்தக்கால், வேடன் அதன்மீது அம்பை எய்த; மான் பாய்ந்தடித்து ஓடியது.

அந்தோ! வேடன் எய்த அம்பு இலக்குத் தவறி, பற்றைக்குள் மறைந்திருந்த நரியைப் பதம் பார்க்க நரி ஊளையிட்டவாறு அவ்விடத்தில் வீழ்ந்து இறந்துபோனது.

இது ஒரு காலத்தில் சிறுவர்களின் பாடப் புத்தகத்தில் இடம்பெற்ற கதை.

இந்தக் கதை உணர்த்துகின்ற கருப்பொருள் பலவாயினும் தந்திரம் என்பது சில சந்தர்ப்பங்களில் அவதந்திரமாகி சம்பந்தப்பட்டவருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்பது இதன் முதன்மைக் கருப்பொருள் எனலாம்.

ஆம், இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி, அரசியலை ஆட்டம் காண வைத்துள்ளது.

அரசு பதவி விலகினாலும் விலகாவிட்டாலும் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைமையே இப்போது காணப்படுகிறது.

இதில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி; அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முற்பட்டபோது, அதற்கு அரசாங்கத்தில் இருந்து விலகிய பங்காளிக் கட்சிகள் ஆதரவு வழங்க மறுத்துவிட்டன.

ஜனாதிபதியையும் பிரதமரையும் வீட்டுக்கு அனுப்புவதே எமது இலக்கு. அந்த இலக்கை நம்பிக்கையில்லாப் பிரேரணை முறியடித்துவிடும்.

ஆகையால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது பொருத்தமற்றது என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

அதேநேரம் புதிய அமைச்சர்களை நியமிப்பதாக இருந்தால், மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வரக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிபடக் கூறிவிட்டார்.

இங்குதான் மிகமோசமான அரசியல் சூழமைவு உருவாகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதுதான் ஒரே வழி என ஜனாதிபதி கோட்டாவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கருதுகின்ற கட்டம் வந்துவிட்டது.

ஆம், இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் தூக்கி நிறுத்தக்கூடிய ஆற்றல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே இருக்கிறது என்ற கருத்தியலும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றால், அவர் தங்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் சேர்ந்து ஜனாதிபதி கோட்டா பிரதமர் மகிந்த ஆகியோரின் நினைவெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது.

ஆனால் இந்த நெருக்கடியான நேரத்தில் ரணில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்பாராயின், மானுக்கு எய்த அம்பு நரியைத் தாக்கிய கதையாகவும் நிலைமை முடிந்துவிடும்.

### குடும்ப ஆட்சிக்கு இடமளிக்கக்கூடாது

# 21 மில்லியன் மக்கள் வாழும் நாட்டை 226 பேர் அழித்துவிட்டனர்

### குமார் சங்கக்கார சாடல்

(கொழும்பு)

குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண நாட்டு மக்களுக்கு உடனடி தீர்வுகள் அவசியம் என குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இடம்பெற்ற நேர்காணலில் பேசிய சங்கக்கார, 21 மில்லியன் மக்கள் வாழும் நாட்டை வெறும் 226 பேர் மட்டுமே அழித்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

நாம் அனைவரும் தேர்ந்தெடுத்த தலைவர்கள் மோசமான கொள்கைகளை வைத்துள்ளதாகவும் மோசமான நிதி நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதைவிட மோசமாக அவர்கள் தங்கள் சொந்த மக்களை இந்த உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைக்கு கொண்டு வந்ததற்கு வருத்தம் கூட தெரிவிக்கவில்லை என்றும் சாடினார்.

தேசிய அல்லது காபந்து அரசாங்கம் பற்றிய பேச்சுக்கள் இருக்கும் நிலையில் நெருக்கடிக்கு மக்களுக்கு உடனடி குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் அவசியம் என சுட்டிக்காட்டினார்.

இன்னல்களை எதிர்கொண்டுள்ள நேரத்தில் மட்டும் ஒன்றிணையாத இலங்கையைத்தான் தனிப்பட்ட முறையில் நம்ப விரும்புவதாக குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இதுவே இனவாதம் மற்றும் மதவாதம் சமூகத்திலோ அல்லது அரசியலிலோ எந்தப் பங்கையும் வகிக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழலுக்கும், உறவினர்களுக்கு பதவிகளை வழங்குவது மற்றும் குடும்ப ஆட்சியை கொண்டு செல்வதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் 250 உளவாளிகள் களத்தில்

### பொலிஸ் உயர் மட்டம் தகவல்

(கொழும்பு)

காலி முகத்திடலை அண்மித்து, ஜனாதிபதி செயலகம் முன்பாக திரண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் " கோ ஹோம் கோட்டா" எனும் தொனிப்பொருளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், அவ்வார்ப்பாட்டக்காரர்களிடையே சுமார் 250 வரையிலான அரச உளவாளிகள் இருப்பதாக பொலிஸ் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

உயரதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய இவ்வாறு அதிகப்படியன உளவாளிகள் ஆர்ப்பாட்டக்காரர்களிடையே இருந்து தகவல் சேகரித்து வருவதாக பொலிஸ் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

அரச உளவுச் சேவை, பொலிஸ் விஷேட நடவடிக்கை பிரிவு, மேல் மாகாண உளவுப் பிரிவு மற்றும்நுகேகொட உளவு நடவடிக்கை பிரிவின் உறுப்பினர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் தகவல் சேகரிக்கும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன்ர்.

இதில் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் மட்டும் அவதானம் செலுத்தும் நுகேகொட உளவு விஷேட நடவடிக்கை பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்கள், ஆர்ப்பாட்டத்தில் தகவல் சேகரித்து வருவதாக அறிய முடிகிறது.

அத்துடன் ஜனாதிபதி செயலகத்தை பெரும் திரளான மக்கள் தொடர்ச்சியாக முற்றுகையிட்டுள்ள நிலையில், அப்பகுதிக்கு கலகத் தடுப்பு பொலிஸாருடன், கொழும்பு மத்திய பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கல்கிசை, களனி, நுகேகொடை, கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, நீர்கொழும்பு, களுத்துறைபாணந்துறை, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு, மோசடி தடுப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் விஷேட கடமைக்காக அழைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி பதவி விலகும் வரை ஆர்ப்பாட்டத்தை தொடரப் பேரவதாக கூறும் ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலக பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸாருக்கும் தேனீர், பிஸ்கட்டுக்கள் உள்ளிட்டவற்றை வழங்கி அமைதியாக தமது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில், சித்திரா பூரணை விரத விசேட பூசைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

அந்த வகையில் அதிகாலை விசேட பூசைகள் இடம் பெற்று காலை 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றும் அதன் பின் பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடவுளே எல்லோருக்கும் குரு

❖எல்லா அறிவும் நம்முள் இருக்கிறது என்பது உண்மையே. அதை வெளிப்படுத்துவதற்கு மற்றோர் அறிவு வேண்டியிருக்கிறது. அறிவதற்கான திறமை நமக்குள் இருந்தாலும் அதை வெளிக்கொணர வேண்டும். அப்படி ஓர் அறிவை வெளிப்படுத்த மற்றோர் அறிவால் தான் முடியும் என்கிறான் யோகி. உயிரற்ற உணர்ச்சியற்ற ஜடப்பொருள், அறிவை வெளிப்படுத்த முடியாது. அதற்கு மற்றோர் அறிவு வேண்டும் என்பது யோகியின் கருத்து.

❖நம்முள் இருப்பதை விழிப்புணர்த்த குருமார்கள் நம்முடன் இருக்க வேண்டும். இத்தகைய குருமார்கள் எப்போதும் தேவை அவர்கள் இல்லாமல் உலகம் ஒருபோதும் இருந்ததில்லை. அவர்கள் இல்லாமல் எந்த ஞானமும் வராது.

❖கடவுளே குருமார்கள் அனைவருக்கும் குரு. ஏனெனில் மற்ற குருமார்கள் எவ்வளவு [illegible] களாக இருந்தாலும், தேவதூதர்களாக இருந்தாலும் காலத்தால் கட்டுப்பட்டவர்கள். கடவுள் அவ்வாறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 39

### மன்னார் மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத் தொகை வேறுபாடு அட்டவணை (M5) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட சனத்தொகையில் பெரும்பான்மையினர் 80.4% இலங்கைத் தமிழர்கள் ஆவர். இலங்கை முஸ்லிம்கள் 16.5% காணப்படுகின்றனர். சமய அடிப்படையில் நோக்கும் போது பெரும்பான்மையினர் உரோமன் கத்தோலிக்கர்களாக உள்ளனர். அது சனத் தொகையில் 52.6% ஆகும். அடுத்து இந்துக்கள் 24.1% முஸ்லிம்கள் 16.6% காணப்படுகின்றனர்.

அட்டவணை (M5): இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு

மன்னார் மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 2,305 | 2.3 | | பௌத்தம் | 1,809 | 1.8 |
| இலங்கைத் தமிழர் | 80,103 | 80.4 | | இந்து | 24,027 | 24.1 |
| இந்தியத் தமிழர் | 692 | 0.7 | | இஸ்லாம் | 16,512 | 16.6 |
| இலங்கை முஸ்லிம் | 16,436 | 16.5 | | கத்தோலிக்கம் | 52,415 | 52.6 |
| வேறு | 34 | - | | ஏனைய கிருஸ்தவம் | 4,790 | 4.8 |
| | | | | வேறு | 17 | - |
| மொத்தம் | 99,570 | | | மொத்தம் | 99,570 | |

### மன்னார் மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி வடமாகாண சபையில் உள்ள மன்னார் மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் 5 ஆக இருந்தது. திருத்தச்சட்டம் 2017 பகுதி 3 A (2) இன் படி மன்னார் மாவட்டம் 3 மாகாணசபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி வடமாகாண சபையில் உள்ள மன்னார்மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் 5 ஆக இருந்தது. இதன்படி மன்னார்மாவட்டம் 3மாகாணசபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

மன்னார் மாவட்டத்தில் 5பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 153 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 99,570 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 33,190 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 153 கிராம உத்தியோத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 99,570 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 33,190 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

மன்னார் மாவட்ட செயலகத்தில் 29.11.2017 அன்று மாலைபொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 21 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்பிக்கும்படிகேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 18 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 39 பிரேரணைகளை குழு பெற்றுக்கொண்டது.

பல பிரேரணைகளின் பரிந்துரைகள் எல்லை நிர்ணயமானது பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என கூறப்பட்டிருந்தது. ஒரு பிரேரணை உள்ளூராட்சி அதிகாரசபை எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனக்கூறியது. மேலும் பரிந்துரைக்கப்பட்ட பிரேரணைகள் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததையும்,மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாமல் இருந்ததையும் குழு அவதானித்தது.

இப்பிரேரணைகளை குழுவால் ஏற்க முடியவில்லை. மேலும் எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேவையான மக்கள் தொகை, புவியியல் பிராந்திய தகவல்கள் மற்றும் இயல்பு தகவல்கள் போன்றவை உள்ளூராட்சி அதிகாரசபைகள், பழைய பாரளுமன்ற தொகுதிகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) அடிப்படையில் அமையாமல் இருந்ததோடு, அவை கிராம உத்தியோகத்தர் பிரிவு., பிரதேச செயலகப்பிரிவு ஆகிய நிர்வாகப் பிரிவுகள் அடிப்படையில் அமைந்து இருந்ததால் கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப்பிரிவு ஆகியவற்றை அடிப்டையாகக்கொண்டு எல்லை நிர்ணயம் செய்ய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்துகொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகப் பிரிவுகளை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும்போது சேர்த்துக்கொண்டுள்ளது. மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரியின் கணிசமான விலகல் வரம்புகளுக்குட்பட்டதாகவும் இருக்கும் வகையிலும் 2017 ஆம் திருத்தச் சட்டம்பகுதி 3 (A) (4) (b) அமைவாக வும் எல்லை நிர்ணயம் செய்ய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

சில சமர்ப்பிப்புகள் முசலி பிரதேச செயலகப்பிரிவை ஒரு தேர்தல் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்யும்படி பரிந்துரைத்திருந்தன. முசலி பிரதேச செயலகப்பிரிவின் சனத்தொகை 8,200ஆகவும் அப்பரிந்துரைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன் நோக்கத்தினை திருப்திப்படுத்தாமலும் இருந்ததால் குழுவால் அவை கருத்தில் எடுக்கப்படவில்லை,

**சில சமர்ப்பிப்புகள் முசலி பிரதேச செயலகப்பிரிவை ஒரு தேர்தல் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்யும்படி பரிந்துரைத்திருந்தன. முசலி பிரதேச செயலகப்பிரிவின் சனத்தொகை 8,200 ஆகவும் அப்பரிந்துரைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன் நோக்கத்தினை திருப்திப் படுத்தாமலும் இருந்ததால் குழுவால் அவை கருத்தில் எடுக்கப்படவில்லை.**

சில சமர்ப்பிப்புகள் முஸ்லிம் பிரதிநிதிக்காக ஒரு தேர்தல் தொகுதியை கோரி இருந்தன. பெரும்பாலானவை எந்த முன்மொழிவையும் தந்திருக்கவில்லை. சில சமர்ப்பிப்புகள் ஒரு பல் அங்கத்துவ தொகுதியில் இருந்து ஒரு முஸ்லிம் அங்கத்தவர் தெரிவுசெய்யப்படவேண்டும் என்றும் வேறு சில சமர்ப்பிப்புகள் தனித்தொகுதியில் இருந்து ஒரு முஸ்லிம் அங்கத்தவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்றும் கருத்தினைக் கொண்டிருந்தன.

தொகுதியை நிர்ணயிப்பதற்கு முஸ்லிம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலகப்பிரிவுகள் எவ்வெவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்று சில சமர்ப்பிப்புகள் முன்மொழிந்திருந்தன. இவ்வாறு பரிந்துரைகள் வேறுபட்டிருந்தன.

பெரிய சிறுபான்மையான (முஸ்லிம்கள்) முழு மாவட்ட சனத்தொகையிலும் 17%க்கு கீழ் நிலத்தொடர்பற்ற இரண்டு பிரதேச செயலக பிரிவுகளில், மன்னார் நகரம் மற்றும் முசலி உள்ளடங்கி இருப்பதுடன், அவ்விரு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள முஸ்லிம்கள் ஒரு தேர்தல் தொகுதிக்கான சராசரி சனத்தொகையில் 49.5% உள்ளடக்கியுள்ளதை குழு அவதானித்தது.

குழு மேலும் அவதானித்ததாவது முஸ்லீம் அல்லாத பெரும்பான்மையுடைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இணைக்காமல் முஸ்லிம்கள் பெரும்பான்மையாய் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மட்டும் ஒரு தேர்தல் தொகுதியாக இணைப்பது சாத்தியமற்றத்தாகும் என்பதே. அதுவும் தேவையான நோக்கத்தை அடைந்திருக்கவில்லை,அதனால் குழு முஸ்லிம் சனத்தொகையை இரண்டு தேர்தல் தொகுதிகளுக்குள் உள்வாங்கியுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொறி மோதி...

உயிரிழந்துள்ளான்.

யாழ்.நகர்ப் பகுதியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை பின்னால் பயணித்த லொறி மோதியதில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த சிறுவன் வீதியில் விழுந்து லொறியின் சக்கரத்திற்குள் சிக்குண்டதால் சம்பவ இடத்திலேயே சிறுவன் தாயின் கண் முன்னே உயிரிழந்துள்ளான்.

தாவடிப் பகுதியைச் சேர்ந்த அபித்தன் அபிநயன் (வயது- 10) என்ற சிறுவனே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளான்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வருகை தந்த யாழ்ப்பாணம் பொலிஸார் லொறியின் சாரதியைக் கைது செய்ததுடன் லொறியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,18,33)

## எரிபொருளுக்...

பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹபரகட, தவலம, படுவத்த் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தகொட பத்திரணகே திலக் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வாகனத்தில் வந்த அவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நின்றுள்ளார்.

காலை 6.30 மணியளவில், எரிபொருள் நிரப்ப வந்த இன்னொருவர், சாரதி இருக்கையில் ஒருவர் சடலமாக கிடப்பதைக் கண்டுள்ளார்.

இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(ம-7)

மெகா பவர்
திகதி 11/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1082
N 23 04 36 64 77

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 043
கும்பம் 13 29 31 39 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/11
சீட்டிழுப்பு இலக்கம் 4734
M 0 2 0 1 7 2

தன நிதானய
திகதி - 2022.04.11
சீட்டிழுப்பு இலக்கம் - 764
J 21 32 55 76

## ராஜபக்ஷவின்...

போட்டாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது" இவ்வாறு முன்னாள் அமைச்சரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

ஜனாதிபதியையும் அரசையும் வீட்டுக்குச் செல்லுமாறு கோரும் எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஏன் மௌனம் காக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சியினருக்குள் ஒற்றுமை இல்லை எனவும், அவர்கள் அரசுக்கு எதிராகப் பொங்குவதால் எவ்வித பயனும் ஏற்படாது எனவும் அவர் கூறினார்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி அரசால்தான் தீர்வு காணமுடியும் எனவும் நாமல் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணிதலைமையிலான அரச கூட்டணியுடன் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-7)

## கொட்டும் மழை...

ஏராளமான மக்களின் பங்குபற்றுதலுடன் மழைக்கு மத்தியிலும் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கோட்டாபய வீட்டுக்குப் போகும் வரை நாங்கள் வீட்டுக்குப் போகமாட்டோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ள நிலையில் இவ்வாறு போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தொடர்ச்சியாக இரண்டு நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு சமூக ஆர்வலர்கள் உணவு, குடிதண்ணீர் மற்றும் குடிபானங்களை வழங்கி வருகின்றனர்.

அரசின் ஒவ்வொரு நகர்வையும் அவதானித்தபடியும் ஏற்படப்போகும் மாற்றங்களை எதிர்பார்த்தபடியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புல், புண்ணாக்கு...

ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக வெளியிடங்களில் இருந்தும் 'வழக்கம் போல' ஆட்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில், பேரணியில் கலந்து கொள்பவர்கள் உட்கொள்வதற்கென அறிவித்தலிட்டு புல், புண்ணாக்கு உள்ளிட்ட மாடுகளின் தீவனங்கள் அந்த பகுதியில் வைக்கப்பட்டன.

அநுராதபுரம் இளைஞர் கழகத்தின் பெயரில் இந்த பதாதை வைக்கப்பட்டிருந்தது. (ம-7)

## பிரச்சினைகளை...

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய சிறப்பு உரையிலேயே அவர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

இன்று நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு நாங்கள் முழுப்பொறுப்பேற்கிறோம். உங்களை எல்லாம் வரிசையில் பார்க்க நாங்கள் வீதிகளை அமைக்கவில்லை. நீங்கள் கண்ணீர் புகை வீசியதைக் காண நாங்கள் கோவிட்-19ஐ தோற்கடிக்கவில்லை.

பிரச்சினைகளைத் தீர்க்க முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம். இலங்கை கடன்களிலிருந்து விடுபட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

80களில் 60,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். பாராளுமன்றம் மீது குண்டு வீசப்பட்டது. (ஜே.வி.பி கிளர்ச்சியைக் குறிப்பிட்டு) அந்த நினைவுகளை உங்கள் பெற்றோரிடமிருந்து நினைவுபடுத்துமாறு இளைஞர்களை நான் கேட்டுக் கொள்கிறேன் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் யாரும் முன்வரவில்லை.

எனவே, ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. தற்போதைய நெருக்கடியை தீர்க்க நாம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது உரையில் தெரிவித்துள்ளார்.

மேலும், சேதனப் பசளை திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இது உகந்த தருணம் அல்ல என சுட்டிக்காட்டிய பிரதமர், விவசாயிகளின் நலன் கருதி மீண்டும் உர மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் போராட்டங்களை முன்னெடுக்கும் ஒவ்வொரு நிமிடமும் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் டொலர்களை வெகுவாக பாதிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

எனவே, மக்களை பொறுமையாக இருக்குமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## பிரத...

சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள், நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவது பயனற்றது என்பதுடன், உடனடியாக தேர்தலை நடத்துவதும் சாத்தியமற்றது எனக் கூறியுள்ளனர்.

சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ம-7)

## கோட்...

இலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் கொழும்பு காலிமுகத் திடலில் கடந்த மூன்று நாட்களாக முன்னெடுக்கப்படுகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் சிலர், கூடாரம் அமைத்து போராட்டத்தை தொடர்கின்றனர்.

இந்நிலையில், அவ்வாறு கூடாரம் அமைக்கப்பட்ட [illegible] என்று பெயர் சூட்டி, அறிவித்தல் பலகையொன்றையும் நாட்டியுள்ளனர்.

குறித்த பெயரானது கூகுள் வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை தற்போது வைரலாகி வருகிறது. (ம-7)

## அதிகாரங்களை...

வித்துள்ளார்."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமானால் அரசொன்று இருக்க வேண்டும். அந்த இடைக்கால அரசை அமைப்பதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நிலையான அரசொன்று அமையும் பட்சத்திலேயே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறலாம்" என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1711 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022/04/11 தினம் திங்கள்
M 16 42 45 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 57,294,214/-

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.04.11
சீட்டிழுப்பு இல: 3872
ரூ.3,935,740/-
வெற்றி இலக்கங்கள்
51 60 69 70 F

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-04-11
சீட்டிழுப்பு வாரம் 3423
வர்ணம் மஞ்சள்
10 14 38 53
6 9 8 2 7 0 0
ரூ. 10,957,020/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 14 06 08 53 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 230,832,589/-
887
2022.04.11

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1827
சீட்டிழுப்பு திகதி 2022 / 04 / 11
வெற்றி இலக்கங்கள்
25 35 44 49 Y
ரூ. 33,402,884/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1537
சீட்டிழுப்பு திகதி: 2022.04.11
ரூ. 5,048,620/-
05 17 42 72 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருக்கடிநிலை தொடர்ந்து நீடித்தால்

# ஆகஸ்ட் மாதமளவில் நாட்டில் உயிர் வாழ கூட முடியாத நிலை ஏற்படும்

## ஐ.தே.க தலைவர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டின் நெருக்கடி நிலைமை இவ்வாறே தொடர்ந்து நீடித்தால் ஆகஸ்ட் மாதமளவில் நாட்டில் உயிர் வாழக் கூட முடியாத நிலை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இளைஞர்களின் பல பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும்போதே ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் 19ஆம் திருத்தச் சட்டத்தை மீள அமுலாக்கப்படுவது அவசியம்தான்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியதில்லை.

19ஆம் திருத்தச்சட்டத்தின் ஊடாக பாராளுமன்றுக்கு அதிகாரம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதியால் அமைச்சுப் பதவி வகிக்க முடியாது.

எனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தாம் வகிக்கின்ற அமைச்சுப் பொறுப்பினை பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்குவார்.

அதேபோன்று அமைச்சர்களை நியமிக்கும்போது ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனைகளைப் பெற்றே நியமிக்க வேண்டும்.

தற்போது நான் பிரதமராகவும், ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் இல்லை.

ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது சகோதரர்களாக இருக்கிறார்கள்.

எனவே அவர்கள் இருவரும் கலந்துரையாடியே அமைச்சர்களை தெரிவு செய்வார்கள்.

எனவே தற்போதைய நிலைமையில் 19ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவது முக்கியமில்லை.

இதனை அரசியல் யாப்பின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும். தற்போதைய பிரச்சினை பொருளாதார சிக்கல்தான்.

அதனையே முதலில் தீர்க்கவேண்டும்.

தற்போது இருக்கின்ற வெளிநாட்டு ஒதுக்கங்களின் அடிப்படையில், அடுத்தவாரம் நாட்டை நடத்திக் கொண்டு செல்லக்கூட முடியாத நிலை ஏற்படலாம் என்று ரணில் விக்ரமசிங்க எச்சரித்துள்ளார். (ம-7)


### உதவியாள் தேவை

வயதான தாய் ஒருவரை
பராமரிப்பதற்கு
பெண் உதவியாள் தேவை.
(சம்பளம் பேசித்
தீர்மானிக்கப்படும்.)
(11001)

076 949 0314

யாழ். வடமராட்சி



### பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-4146)

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய்
• சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி
• கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு
• சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

0777-068-777


### நாட்டில் நேற்று மேலும் 65 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 65 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின்மொத்த எண்ணிக்கை 662, 657ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 3,657 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

### 3 பலி

(கொழும்பு)

நாட்டில கொரோனா வைரஸ் தொற்றினால்மேலும்மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். (ம-7)


## மரண அறிவித்தல்



தோற்றம்
09 - 10 - 1992

மறைவு
10 - 04 - 2022

### றாம்ஜெயம் தரணீதரன்

உடுவில் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றாம்ஜெயம் தரணீதரன் அவர்கள் நேற்று முன்தினம் (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் றாம்ஜெயம் - யூலியட் அஞ்சலா தம்பதியரின் அன்பு மகனும் தனுஷன் (கனடா), தரங்கினி (UK), கீர்த்தனா (University of Jaffna - arts Faculty) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிலானி, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரான்சிஸ் சேவியர் - இராஜேஸ்வரி தம்பதியரினதும் நாகரத்தினம் - ராசம்மா தம்பதியரினதும் அன்புப் பேரனும் கவிஷ்னி, கிரித்விக் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் யுவன், யூஜின், கனிஷ்கா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.04.2022) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(11003)

அம்பலவாணர் வீதி, உடுவில்.
076 324 9901
077 857 9658
தகவல் - குடும்பத்தினர்



### பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர் தேவை.
⇨ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
⇨ தங்குமிடம் வழங்கப்படும்.
(C-4155)

077 219 0128



### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி 1 ஆம் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்)
ஒரு பரப்பின் விலை 700,000/=
A9 வீதியிலுள்ள பெற்றோல் செற் இற்கு அருகாமை வீதியில்
(11002)

074 043 6599



### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 23 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

◆ சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
◆ A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
◆ A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
◆ 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
◆ நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 72 தென்னைகள் உள்ளன.
(9568)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

ஜெயம் - 077 814 7389
077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.